03.12.2020
O.S.NO.30/2014
DW.1 திரு.ரெங்கசாமி

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of03.12.2020

(சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)

குறுக்கு விசாரணை– (வாதி தரப்பில்)

என் தகப்பனாருக்கு விவசாயம் தான். தொழில் நானும் என் சகோதரர்களும் என் தகப்பனாருடன் சேர்ந்து விவசாயம் செய்கிறோம். என் அப்பாவிடம இருந்து நானும் என் சகோதரர்களும் சொத்தை பாகம் செய்து கொண்டோம். அந்த சொத்து என் கையில் வரும்போது வேறு சொத்துக்களோ வேறு தொழிலோ இல்லை என்றால் சரிதான். 1970ம் ஆண்டு மல்லை செல்லியம்மன் சேக்கோ பேக்டரி ஆரம்பித்தோம். நானும் முத்துசாமியும் சேர்ந்து சேகோ கூட்டு வியாபாரம் செய்தோம் என்றுகாட்டுவதற்கான ஆதாரம் எதுவும் இல்லை. சேகோ பேக்டரி நடத்த ஆரம்பித்து 35, 40 ஆண்டுகள் ஆகிறது. சேகோ பேக்டரி நடத்துவதற்கு பதிவு செய்திருக்க வேண்டும் விற்பனை வரி வருமான வரி செலுத்த வேண்டும் என்றால் சரிதான். சேகோ பேக்டரிக்கான பதிவு சான்று உரிமம் விற்பனை வரி வருமான வரிக்கான ஆவணங்களை இந்த வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை. சேகோ பேக்டரி நடக்கிறது. ஆனால் தண்ணீர் இல்லாததால் சரியாக நடத்த முடியவில்லை. 1980 முதல் நான் கமிசன் ஏஜெண்ட் வேலை செய்ததற்கு ஆதாரம் இல்லை. நான் பொருட்களை வாங்கி இன்னொருவரிடம் அப்படியோ

கொடுத்து விடுவேன் அதற்குகமிசன் தருவேன் அதற்குஆதாரம் எதுவும் இல்லை. மாவட்டம் விட்டு மாவட்டத்தில் பொருட்களை வாங்கி விற்பனை செய்தால் விற்பனை வரி உரிமம் வேண்டும் என்பது சரியல்ல. நான் பொருட்களை இ பஜாரில் வாங்கி கேரளா ஆந்திர ஆகிய மாநிலங்களுக்கு விற்பனை செய்வேன். நான் வியாபாரம் செய்த குறிப்பிட்ட நபர்களின் பெயரை சொல்ல முடியாது. தொட்டிப்பட்டி கணேசனுக்க சொந்தமான ராணி சேகோ பேக்டரியை குத்தகைக்கு எடுத்து நடத்தினேன் என்பதை காட்டுவதற்கான ஆவணம் எதுவும் இல்லை. கிழங்கு மாவு வாங்கி விற்றதற்கும் ஆதாரம் இல்லை. நான் தொழில் செய்ததற்கு வருமான வரி கணக்கு தாக்கல் செய்துள்ளேன். வருமானவரி செலுத்தியுள்ளேன். சுய தொழில் செய்து வருமானம் ஈட்டுவதற்கான வருமான வரி செலுத்தியுள்ளேன் என்பதற்கு வருமானவரி கணக்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. 2 முதல் 4 அயிட்ட சொத்துக்கள் என்னுடைய சுய சம்பாத்தியத்தில் இருந்து கிரையம் வாங்கியது என்பதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை. 5ம் அயிட்ட சொத்து என் மகன் பெயரில் வாங்கப்பட்ட சொத்துக்கு அவரது மாமனார் வீட்டில் இருந்து தொகையை கொடுத்தார்கள் அது எந்த தேதி என்று ஞாபகம் இல்லை. 2 முதல் 5 இலக்க சொத்துக்கள் 1வது இலக்க சொத்தில் இருந்து கிடைத்த வருமானத்தில் இருந்து வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. என்னுடைய தனிப்பட்ட வருமானத்தில் இருந்து 2 முதல் 5 இலக்கசொத்துக்களை வாங்கினேன் என்று கூறுவது உண்மையில்லை என்றால் சரியல்ல. 1975ல் என் மனைவிக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்து இறந்துவிட்டது என்பதற்கான ஆவணம் எதுவும தாக்கல் செய்யவில்லை. 2ம்

வாதி பெயரில் பாப்பநாய்க்கன்பட்டியில் சொத்து வாங்கிய தேதி ஞாபகம் இல்லை. என் மகள் திருமணத்திற்கு முன்னரே வேலைக்கு போனார். என் மருமகன் ரவிச்சந்திரனுக்கு பூர்வீக விவசாய நிலங்கள் இருந்தது. ரவிச்சந்திரன் 10 வருடங்களுக்கு முன்பு நோய்வாய்பட்டு இறந்துவிட்டார். அவருக்கு பல ஊர்களுக்கு சென்று வைத்தியம் பார்த்தோம் என்பதற்கான ஆதாரம் இல்லை. அரசு ஊழியர் சொத்து வாங்குவதற்கு அனுமதி வாங்க வேண்டும் என்பதால் என் மருமகன் ரவிச்சந்திரன் என் மகள் வாதி பெயரில் சொத்து ரவிச்சந்திரன் வாங்கும்போது நானும் ஒரு தொகை கொடுத்தேன் என்று ஆவணம் அடிப்படைக்காக குறிப்பிடப்பட்டது என்றால் சரியல்ல. நான் அடமான பத்திரம் மற்றும் பதில் உரையில் குறிப்பிட்டிருக்கும் 10 நபர்களுக்கு எந்தெந்த தேதிகளில் எவ்வளவு பணம் பெற்றேன் என்பதற்கு ஆதாரம் இல்லை. நான் யாருக்கும் கடன் தொகை பெறவில்லை என்றாலும் வாதியை ஏமாற்றுவதற்காக அவ்வாறு பொய்யாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல. நிலத்தை பல வகையில் வளப்படுத்தினேன் என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை. வாதிக்கு 1988ம் ஆண்டில் திருமணம் நடத்தினேன் என்பதை காட்டுவதற்கான எந்த ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. தாவா சொத்துக்களை பொறுத்து இன்றைய தேதி வரை எனக்கும் என் குழந்தைகளுக்குமிடையே பாகம் பிரித்து கொண்டோம் என்பதற்கான ஆவணம் எதுவும் இல்லை. பாகம் பிரிக்கவில்லை. எனக்கும் வாதிக்கும் கடந்த 7 வருடங்களாக பேச்சு வார்த்தை இல்லை. என் பேத்தி இறப்பதற்கு 2 வருடங்களுக்கு முன்பு இருந்தே எனக்கும் என் மகளுக்கும் பேச்சு வார்த்தை இல்லை. என் மகளின் சொத்துக்களை என் பெயருக்கு எழுதிக் கொடுக்க

சொல்லி நான் நிர்பந்தப்படுத்த சொன்னதால் தான் எனக்கும் என் மகளுக்கும் பேச்சு வார்த்தை அத்து போய்விட்டது என்றால் சரியல்ல. 4ம் பிரதிவாதி வங்கியில் மல்லை செல்லியம்மன் சேகோ பேக்டரியை வளப்படுத்துவதற்காக தான் கடன் வாங்கினேன். 2014ம் ஆண்டு வாங்கிய கடனை பின்னர் மீண்டும் புதுப்பித்து மேல் கடன் வாங்கினேன் என்றால் சரிதான். கூடுதலாக 4ம் பிரதிவாதியிடம் இருந்து 2 கோடி கடன் வாங்கினேன். 5ம் பிரதிவாதி தர்ம தாஸ்தா அரக்கட்டளை எந்த வருடம் ஆரம்பிக்கப்பட்டது என்று எனக்கு தெரியாது. என் மகனின் மாமனார் அந்த அரக்கட்டளைக்கு ரூ.1லட்சம் எந்த தேதியில் கொடுத்தார் என்று தெரியாது. 5ம் பிரதிவாதி டிரஸ்ட்டில் நான் நிர்வாகிஅல்ல. என் மகன் நிர்வாகியாக இருந்தார். அந்த அறக்கட்டளை கல்வி சம்மந்தமான நிறுவனம் நடக்கிறதா என்று தெரியாது. 5ம் பிரதிவாதி டிரஸ்ட் நடவடிக்கை குறித்து எனக்கு எதுவும் தெரியாது. 5ம் பிரதிவாதி அறக்கட்டளை நிறுவனத்தில் எங்கள் குடும்பம் சம்பந்தமான முலீடுகள் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களில் வாதிக்கு 4ல் ஒரு பங்கு உள்ளதை அவர் பாகம் பிரித்து கேட்டார் என்றும் அதற்கு பாகம் பிரிக்க மறுத்ததால் தான் இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறார் என்றால் சரியல்ல. பாதிக்கு பாிகாரம் கிடைக்க வேண்டும் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை– (5ம் பிரதிவாதி தரப்பில்)

கேள்விகள் இல்லை என்று வழக்கறிஞர் கூறி பதிவு செய்யப்பட்டது

மறு விசாரணை– இல்லை